சௌகரியங்கள் செய்வதன் மூலம் விவசாயிகள் உற்பத்தியிலே அதிக அக்கறை காட்டுகிற அளவிலே நமக்குத் தேவையான அளவு உற்பத்தி செய்ய வழி இருக்கிறது.

சாலைகள் அமைப்பு.

*459 வினா—**திரு. பெ. மலைச்சாமி :** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேலூர் வட்டம் மேலூர்-சேக்கிப்பட்டிச் சாலையில் உள்ள மேலவளவு என்ற ஊரில் அண்மையில் சுமார் 3 பர்லாங் தூரம் வரை தனியார் வசம் உள்ள நிலத்தை வாங்கி சாலை அமைக்கும் செய்ற்குறிப்பு ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது வேலை மேற்கொள்ளப்படும். ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :

(அ) மேலவளவுக்கருகில் மேலூரிலிருந்து சிக்கிப்பட்டிச் சாலைக்குக் கிளைச்சாலை ஒன்று அமைக்கும் செயற்குறிப்பு எதுமில்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

திரு. பெ. மலைச்சாமி : தலைவர் அவர்களே, 20 ஆண்டுகாலமாக இரு பக்கத்திலேயும் பெருவழித்துறை சாலை இருக்கிறது. இடையிலே சாலையே அமைக்காமல் ஊருக்குள்ளே போக்குவரத்துகள் நடந்துக் கொண்டிருக்கின்றன. இதைப்பற்றி பெருவழித்துறை அதிகாரிகள் அரசாங்கம் நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கின்றது என்று கூறுகிறார்கள். விரைவாக அரசு நீதிமன்றத்திற்கு ஒரு குறிப்பு அனுப்புமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இச்சாலை அமைக்க யோசனை பரிசீலனையில் இருக்கிறது. அரசாங்கம் இரண்டாந்தரத் திட்ட வேலைகளின் கீழ் நிதி நிலையை அனுசரித்து இதை சேர்த்துக்கொள்ளும்.

*460 வினா—**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளித்தலை வட்டம், மேலக்கட்டளை பொது மக்களிடமிருந்து சாலை வசதி செய்து தர வேண்டும் என கோரிக்கை ஏதேனும் வந்ததா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : இந்த வினாவையே கோரிக்கையாக ஏற்று எனது தொகுதியில் உள்ள மேலக்கட்டளை கிராமத்திற்கு சாலை வசதி செய்து தர அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இந்த அரசு எப்பொழுதும் கோரிக்கைகளை பரிசீலிக்கும்.

கரூர்—திண்டுக்கல் இருப்புப் பாதை

* 461 வினா.—**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூரிலிருந்து திண்டுக்கல்லுக்கு இரயில் பாதை அமைக்கும் திட்டம் எந்த நிலைமையில் இருந்து வருகிறது ?

(இ) எந்தெந்த ஊர் வழியாக அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) and (இ) : கரூரிலிருந்து திண்டுகல்லுக்கு திட்டமிடப்பட்டுள்ள அகல இரயில் பாதைக்கான அளவை வேலை முடிக்கப்பட்டுள்ளது என்றும், அதன் திட்ட அறிக்கைகளும் மதிப்பீடும் இறுதியாக்கப்படுவதாக தென் மண்டல ரயில்வே பொது மேலாளர் தெரிவித்திருக்கிறுர். திட்டமிடப்பட்டுள்ள பாதை தாந்தோனி, வெள்ளியணை, பாளையம், குஜிலியம்பாறை, கோவிலூர், எரியோடு, குளத்தூர் வழியாக செல்லுகிறது என்றும் தெரிவித்திருக்கிருர்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, இந்த ரயில் பாதையை விரைந்து முடிப்பதற்கு தமிழக அரசு மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ் ஜே. சாதிக் பாட்சா : ஏற்கனவே பரிந்துரைத் திருக்கிறோம். மேலும் பரிந்துரைக்கப்படும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : இந்த ரயில் பாதையின் மொத்த நீளம் என்ன ? இதற்கு ஆகும் செலவு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இது மத்திய அரசிடம் கேட்கவேண்டிய கேள்வி.

Supply of tar by Madras Refinaries.

***462 Q.—Thiru N. S. V. CHITHAN :** Will the Hon. the Minister for Public Works be pleased to state whether the Highways Department has entered into contracts with Madras Refinaries for the supply of tar by the end of the year ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இல்லை.

திரு. சி. கிருஷ்ணமூர்த்தி : தலைவர் அவர்களே, மார்ச்சு மாதம் 31-ம்தேதி பஞ்சாயத்துக்களில் ஹாஃப் கிராண்டு வேலைகள் முடிவடைய வேண்டியிருப்பதால், தார் கிடைப்பது மிகவும் கஷ்டமாக இருப்பதால், தார் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்ய சர்க்கார் முன் வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தார் கிடைக்க ஏற்கனவே ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. குறிப்பாக ஏதாவது குறைபாடு இருக்குமானல், கனம் உறுப்பினர் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. இரா. சௌந்தரராஜ மூப்பனர் : ஏற்கனவே நெய்வேலி தார் விலை அதிகமா என்று கேட்டதற்கு, அதன் விலை விவரம் தெரியாது என்று அமைச்சர் அவர்கள் கூறினர்கள் தற்பொழுது நமக்கு வேண்டிய தார் எங்கு வாங்கப்படுகிறது என்பதை அறிந்துகொள்ளலாமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நமக்கு வேண்டிய தாரை இண்டியன் ஆயில் கார்ப்பரேஷனிடமிருந்து வாங்குகிறோம்.

தேனீ வளர்ப்புப் பண்ணை ஊழியர்கள் வேலை நிறுத்தம்.

***463 வினு—: திரு. ந. தருமலிங்கம் :** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேனீ வளர்ப்புத் துறையிலிருந்து வேலையிழந்த ஊழியர்கள் எத்தனை பேர் ?

(இ) இவர்களுக்கு நமது அரசு வேலையிழப்பிற்குப் பிறகு ஏதுவும் உதவி செய்துள்ளதா ?

(உ) ஆம் எனில், அதுபற்றிய விவரம் என்ன ?